# ராஜம்

மாதர் மலர்

அக்டோபர் '90

★ சிவசங்கரி
- புதுமையான கட்டுரை.

★ இந்துமதி
- உணர்ச்சிமயமான குறுநாவல்



ராஜம் 1990 தீபாவளி மலர்

விலை. ரூ. 5/-

> "அம்மாவும் அப்பாவும் தெய்வம்னா ஏன் என்னை திட்டறாங்க... அடிக்கறாங்க....? தெய்வம் அன்பா இருக்காதா....எப்பவும் இவங்களை மாதிரி கடுகடுனுதான் இருக்குமா?"

# அம்மா பொய் சொல்கிறாள்...

கே. புவனேஸ்வரி



"சுஜி! எழுந்திருடி... இப்பவே டைம் ஆருகி விட்டது..."

அம்மாவின் குரல் கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் இருந்தது சுஜி என செல்லமாக அழைக்கப் படும் சுஜிதாவுக்கு... குளிர் உடம்பை நடுங்கச் செய்தது. இன்னும் கொஞ்ச நேரம் போர்வைக் குள் முடங்கிக் கிடக்க வேண்டும் போல் இருந்தது. "மம்மி! ப்ளீஸ் மம்மி... இன்னும் கொஞ்ச நேரம் தூங்க விடு மம்மி!" — இப்படிக் கேட்கலாமா என்ற நினைப்பு இரண்டு நாட்களுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டியது.

"என்னடி தூக்கம்... உனக்குக் கொஞ்சமாவது அம்மா மேல் அக் கறை இருக்கா... எட்டு மணிக்குப் போனா நைட் வர எட்டாகுதே... என் இரத்தத்தைச் சுண்ட விட்டு நாயா உழைக்கிறேன்... உனக்கு இன்னும் கொஞ்சம் தூக்கமா வேண்டும்... எழுந்திருடி... ம்..."




இப்படி கடிந்து கொண்டதோடு மட்டுமில்லாது அடிக்கவும் செய்து விட்டாளே... நினைக்கும் போதே குபுக்கென கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"சு... ஜி..."

மீண்டும் அம்மாவின் கட்டளை கலந்த குரல்... இன்னும் படுக்கை யில் கிடந்தால் அது நிச்சயம் அடிக்கும்... "எழுந்திரு சுஜி... கமான்..." — அடிபட்ட உடம்பு மனதுக்கு எச்சரிக்கை மணி அடிக்க, மனம் சுஜிக்கு கட்டளை இட போர்வையை விலக்கி விட்டு எழுந்தாள்.

பிரஷ்ஷில் பேஸ்டை பரப்பிக் கொண்டு தன் உடைகளில் எச்சில் வழிய பல் தேய்க்க ஆரம்பித்தாள்.

"லதாம்மா... லதாம்மா... எழுந் திரும்மா... இன்னிக்கு ஸ்கூல்ல எக்ஸாம் இல்லையா? படிக்க வேண் டாமா? எழுந்திருடாக் கண்ணு... என் சமர்த்தில்லே..."

— அடுத்த வீட்டு சகத் தோழி லதாவை அவள் அம்மா எழுப்பிக் கொண்டிருந்தது ஒற்றை கல் சுவற்றைத் தாண்டி கொண்டு வந்து அதிகப் பிரசங்கத்தனமாய் சுஜியின் வயிற்றெரிச்சலைக் கிளப்பி விட்டுச் சென்றது. இன்று எக்ஸாம் என்பது கூட வயிற்றைக் கலக்கவில்லை. மனம் பாசத்துக்கு ஏங்கியது.

"சே... இந்த அம்மா சுத்த மோசம்... ஒரு நாளாவது இப்படி ஆசையா அன்பா" — எண்ணங் களுக்குக் கூட துக்கமாயிருந்தது. தொடர்ச்சியாய் எண்ண முடிய வில்லை. அரை குறையாய் வாயைக் கழுவிக் கொண்டு சமையலறையில் எதிர் பட்ட மம்மியிடம் 'குட் மார்னிங் மம்மி' என்றாள். ம்ஹூம்... கை வேலையாக இருந்த அம்மா திரும்பிப் பார்த்தால் தானே? 'சரி... சரி... போ... போய் உங்கப்பாவைக் குளிப்பாட்டி விடச் சொல்லு... முகத்தை திருப் பாமலேயே குரல் மட்டும் கொடுத் தாள். 'ஓகோ... இன்னிக்கும் சண்டையா... ஏன் இப்படி தெனம் சண்டைப் போடறாங்க... எதுக்காக அவசரம் அவசரமா என் தூக்கத்தை யும் கலைச்சி அவங்கத் தூக்கத்தை யும் கலைச்சுண்டு சீக்கிரமா எழுந்து சண்டைப் போட்டுண்டு ஆஃபீ ஸுக்குக் கிளம்பி... ராத்திரி ரொம்ப நேரம் கழித்து வராங்க...' — பிஞ்சு மனதுக்கு அம்மா — அப்பாவின் அவசர உலகம் வியப் பைத் தந்தது!

"அப்பா... அம்மா என்னை குளிப்பாட்டி விடச் சொன்னாங்க."

பேப்பரில் மூழ்கியிருந்தவர் கோபமாக அதை வீசி எறிந்து விட்டுச் சொன்னார்.

"போ... போய்... உங்கம் மாவையே இந்த மாதிரி வேலை யெல்லாம் செய்யச் சொல். எனக்கு இப்போ நேரம் இல்லை. ஆஃபீ ஸுக்குக் கிளம்ப வேண்டும்..."

"சரி... இன்னிக்குக் குளிக்கா மலேப் போனால் தான் என்ன?" என்று நினைத்து புத்தகப் பையை எடுத்து அன்று நடக்க இருக்கும் தேர்வுக்கானப் பாடத்தை எடுத்து பிரித்து வைத்துக் கொண்டாள்.

"அன்னையும் பிதாவும் முன் னெறி தெய்வம்..."

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை... தந்தை சொல் மிக்க மந்திர மில்லை..."

தன் மழலைக் குரலால் சத்த மிட்டுப் படித்தாள். தன் வகுப்பு ஆசிரியை நேற்று இதற்கு பொருள் சொன்னது நினைவிற்கு வந்தது.

"அம்மாவும்... அப்பாவும் தெய் வம்னு... ஏன் என்னைத் திட்ட றாங்க... அடிக்கறாங்க... தெய்வம் அன்பா இருக்காதா... எப்பவும் இவங்களை மாதிரி கடுகடுனு தான் இருக்குமா... தாயிற் சிறந்த கோயி லில்லையாமே... கோயிலுக்குப் போனா... சாமி கும்புடுவாங்க... அம்மாவை ஆசையா அன்பா ஏதா வது கேட்டா... போ... போ...னு விரட்டுறாளே. தந்தை சொல் மிக்க மந்திரமில்லைனு சொல்லியிருக்கே. அப்படினு தந்தை... அப்பா... எது சொன்னாலும் கேட்கணுமாம். 'ஒழி! என் கண் முன்னு நிக்காதே' இப்படி யெல்லாம் அப்பாச் சொல்றாரே!"

பாடத்தில் கவனம் இல்லை... பாடத்தில் சொல்லியிருப்பதை தன் அப்பா அம்மாவோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது இந்த நவீன யுகத்து பிஞ்சு. இதற்குள் அம்மா காபி கலந்து வந்தாள். "என்னடி இன்னும் உங்கப்பா உன்னைக் குளிப்பாட்டி விடவில் லையா?" என்றாள்.

"இல்லம்மா... அப்பா உன் னையே குளிப்பாட்டி விடச் சொன் னார்."

காபி டம்பளரை 'ணங்' கென தரையில் வைத்து விட்டு ஹாலுக்கு விரைந்தாள்.

"என்னங்க... நானே எப்படி எல்லா வேலையையும் செய்ய முடியும். அவளை குளிப்பாட்டி விடக் கூடாதா? இப்பவே மணி ஏழரை. நானும் மனுஷி தானே?"

"ஐயோ... அம்மா அப்பா வோடு சண்டைப் பிடிக்கறா... பயமா இருக்கே... அம்மா என்னை அடிக்குமே..." — அனுபவப்பட்ட மனசு எச்சரிக்கை மணி அடித்து தாயின் அடிக்கு உடம்பைத் தயார் செய்தது... நினைத்தபடியே...

"யேய் சுஜி... இங்க வாடி... புத்தகத்தை மூடி வச்சுட்டு வா... நீ படிச்சுக் கிழிச்சது போதும்!" — குரல் உள்ளிருந்து அசுர வேகத் துடன் வந்தது. பாதி குடித்துக் கொண்டிருந்த காபியை அப்படியே வைத்து விட்டு பி.டி. உஷா வேகத் துடன் ப்ராக் பறக்க உள்ளே ஓடி னாள். அம்மா சாமி வந்த உடம்புக் கணக்காய் நின்றிருந்தாள்.

"என்னடி... உன் மனசுல நீ என்னதான் நினைச்சுண்டிருக்கே. வயசு எருமை மாடாட்டும் ஆறது. உன் வேலையை நீயே செய்துக்கக் கூடாதா... வாடி இங்கே... என் இரத்தத்தைச் சுண்டி நாயாப் பேயா உழைக்கிறேன்..." தரதரவென கையை பிடித்து இழுத்துச் சென்ற வளிடம் 'மம்மி! நீ ஏன் வேலைக்குப் போறே... போக வேண்டாம்' என்று சொல்ல நினைத்து நாவை அடக்கிக் கொண்டாள். இந்த நேரத் தில் அம்மாவிடம் இப்படியொரு



காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்; கலை வளர்ப்போம், கொல் லருலை வளர்ப்போம்; ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்; உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்.

சிறுகதை

கேள்வியைக் கேட்டால் என்ன நடக்கும் என்று சுஜிக்கு நன்றாகவே தெரியும். இந்த உலகத்தில் ஜனித்த ஐந்து வருட காலமாக அவள் அம்மாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாளே!

ஆத்திரத்துடன் தன்னை தயார் செய்த அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவசரம் அவசரமாக பின்னலை அவிழ்த்து எண்ணெய் தடவினாள். சட்டென கலா நேற்று பின்னிக் கொண்டு வந்திருந்த பூரான் பின்னல் நினைவுக்கு வந்தது. மனதுக்குள் ஆசை பொங்கி வழிய...

"மம்மி... மம்மி... நேற்று கலா பூரான் பின்னல் பின்னிக் கொண்டு வந்திருந்தா... எத்தனை அழகா இருந்தது தெரியுமா? மழுமழுனு... அப்புறம் ரோஸ் வச்சுண்டு எத்தனை ஜோரா வந்திருந்தாத் தெரியுமா?"

பட்டென முதுகில் ஒரு அடி வைத்தாள். சுரீர் என்றது. "சே... அம்மா சுத்த மோசம்... எதுக் கெடுத்தாலும் அடிக்கறே... இந்த அம்மாவே எனக்கு வாண்டாம்..." — கண்களில் கண்ணீர் குற்றால அருவிக் கணக்காய்...

"அம்மா இப்படிக் கஷ்டப் படறேனு உனக்குக் கொஞ்சமாவது அக்கறை இருக்கா? இனிமே கேப்பியா சொல்லு..." — கணவன் மீது இருந்தக் கோபத்தை சுஜியின் கன்னம், முதுகு... இப்படி தன் கை விரல் பதிய வைத்தாள். மௌன அழுகை சப்தமிட்டது. 'ஓ'வென சப்தமிட்டு அழுதாள் சுஜி.

"என்ன இங்கே சத்தம்...?" என பேண்ட், சட்டைக்குள் நுழைந்த அப்பா வந்தார். சுஜியின் அழுகையைப் பார்த்ததும் அவர் முகம் கடுகடுவென்றானது. "என்ன... என்ன ஒப்பாரி...? உன்னோடு பெரிய ரோதனையாயிடுத்து... நிறுத்து. அழுகையை நிறுத்தும்மா! மனுஷன் கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்க முடியாதே..."

அழுகை அடக்க மாட்டாது பீறிட்டது. கேவிக் கேவி இன்னும் அதிகமாய் அழுதாள். அம்மா அவசரமாய் பின்னி விட்டத் தலையை சுவரருகே சுருண்டாள். அழுது கொண்டே இருந்தாள்.

"சுஜி... இங்கப் பாரு... ப்ரிஜ்ஜில சாப்பாடு இருக்கு. மத்யானத்துக்கு டிபன் பாக்ஸ்ல இட்லி இருக்கு. ராஜம்மா வந்ததும்... போடச் சொல்லி சாப்பிடு... பத்திரமா ஸ்கூல் போயிட்டு வா... என்ன?"

பேகை மாட்டியபடி சுஜிக்கு கட்டளை இட்டுச் சென்றாள் அம்மா. அவள் அவசரம் அவளுக்கு. அன்புக்கும் பாசத்துக்கும் நேரம் ஒதுக்க முடியவில்லை. என்ன செய்வது? இது நவீன யுகமாயிற்றே. ஆனால் குழந்தை மனசு, பிஞ்சு மனசு அதற்காகத் தானே ஏங்குகிறது?

"சுஜி... சுஜிக்கண்ணு... எந்திருடா... ஸ்கூலுக்கு டைம் ஆவுல... வாடா... சாப்புட்டு பொறப்படலாம்..." ராஜம்மா — சுஜியை கவனிக்க அமர்த்தப்பட்ட ஆயா. அன்போடு, கனிவோடு எழுப்பினாள்.

அன்பும் கனிவும் அழுகையை அதிகமாக்கியது. "ஆயா... எனக்கு... எனக்கு.. மம்மி பிடிக்கலே... டாடி பிடிக்கலே... என்னை உங்க வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிடு!" — மடி புதைந்து அழும் சுஜியை அள்ளி அணைத்து முத்தமிட்டாள். குழந்தை என்றால் உயிரையே விடும் அவளுக்கு திருமணமாகி இருபது வருடமாகியும் குழந்தை இல்லை. சுஜி மீது உயிரையே வைத்திருந்தாள்.

"சுஜிம்மா அம்மா எதுக்கு வேலைக்குப் போறாங்க... உன்னை பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்கத்தான்... நீ ராணி மாதிரி இருக்கத்தான்."

"போ... நான் படிக்க மாட்டேன்..."

சிணுங்கியவளை தூக்கிக் கொண்டு சாதம் ஊட்டினாள். வேண்டுமா வேண்டாமா என்று கேட்காது கடமைக்கு வாயில் திணித்து தண்ணீர் குடிக்க வைத்தாள். என்ன தான் குழந்தை மீது ப்ரியம் என்றாலும் சம்பளத்துக்கு வருபவள் தானே?

ஸ்கூலில் மனம் ஒரு நிலையில் இல்லை. தன் அம்மா அப்பா மட்டுந்தான் இப்படி இருக்கிறார்களா? இல்லை... கலா, லதா, சுதா... இவர்களின் அம்மா அப்பாவும் இப்படித்தான் இருப்பார்களா? மனம் ஒப்பிட்டுப் பார்த்தது. ம்ஹூம்... நிச்சயம் இருக்க மாட்டார்கள்... லதா தான் சொல்லியிருக்கிறாளே... 'எங்கம்மா தெனம் நான் சாயந்தரம் போனதும் டிபன் பண்ணி வச்சிருப்பாங்க... தெனதெனம் புது மாதிரியான டிபன். அப்புறம் காபி சுடச்சுட... அப்புறம் என்னோடு கூட உக்காந்துண்டு கேரம் வௌளயாடுவாங்க... அப்புறம் அப்பா 'லது குட்டி'னு கூப்பிட்டுக்கிட்டே வருவாரு. கிஸ் பண்ணுவாரு. சாக்லெட் கொடுப்பாரு... நிறைய கதை சொல்லுவாரு... நைட் எங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் நடுவுல படுத்துப்பேன்."

நினைக்க நினைக்க துக்கம் தொண்டையை அடைத்தது.

மதிய இடைவேளை... சக தோழிகளுக்கு அவர் அவர்கள் அம்மா சாப்பாடு எடுத்து வந்து ஊட்டினார்கள். ஏக்கப் பார்வையுடன் தன் டிபனை வேண்டா வெறுப்பாய் எடுத்துச் சாப்பிட்டாள்.

"சுஜி... இன்னிக்கு என்ன டிபன்..." சௌமி கேட்டுக் கொண்டே வந்தாள்.

"இட்லி..."

"தெனம் இட்லி தானா? ஐயே... இன்னிக்கு எங்கம்மா எனக்கு பூரிக் கிழங்கு பண்ணிக் கொடுத்தாங்க..." — சொல்லி விட்டு ஓடியது கள்ளம் கபடமில்லா பிஞ்சு மனம் கொண்ட சௌமி.

இன்று மாலை நிச்சயம் அம்மாவிடம் பூரிக் கிழங்கு செய்யச் சொல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டாள் சுஜி. சுதா, லதா, கலா இவர்கள் சாப்பிட்டு முடித்து அம்மா மடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சுஜியும் எழுந்து ஓடினாள். அவர்களருகே சென்று உட்கார்ந்து கொண்டாள்.

"அம்மா... எனக்கு இந்த பிறந்த நாளுக்கு புது மாதிரியான ஃப்ராக் வேணும்மா... சௌமி வச்சிருக்காளே அது மாதிரி..." — இது லதா.

"வாங்கிக் கொடுத்துட்டாப் போச்சு!" — இது அவளுடைய அம்மா.

"அம்மா... இன்னிக்கு சாயந்திரம் அப்பாக்கூட 'அபூர்வ சகோதரர்கள்' கமல் அங்கிள் படம் போகலாம்மா..." — இது கலா.

"ஓ.கே..." — இது அவள் அம்மா.

"அம்மா... அம்மா... இன்னிக்கு மெரீனா பீச் போலாம்மா" — இது சுதா.

"சரிடா கண்ணு!" — இது அவள் அம்மா.

சுஜிக்கும் ஆசையாய் இருந்தது. தன் அம்மாவிடமும் இது மாதிரியான ஆசைகளைச் சொல்ல வேண்டும்... ஆசையாய் மடியில் உட்கார்ந்து கொள்ள வேண்டும்... கதைகள் சொல்லச் சொல்லிக் கேட்க வேண்டும்... அப்பா கைப் பிடித்து மெரீனா பீச்சில் மணலில் நடக்க வேண்டும்... அப்பா தனக்கு ஆசையாய் முத்தம் கொடுக்க வேண்டும். இருவருக்கும் நடுவில் படுத்துக் கொள்ள வேண்டும். இப்படி... எத்தனையோ கற்பனைக் கோட்டைகள்... மணல் கோட்டைகள்!

வகுப்பில் பாடங்களை ஒழுங்காக கவனிக்க முடியவில்லை. நினைவெல்லாம் அம்மா... அப்பா... வீட்டைச் சுற்றியே! பெல் அடித்ததும் கூட்டை விட்டு பறந்து செல்லும் பறவைகளாய் குழந்தைகள் பள்ளியை விட்டு வெளி வந்தன. ராஜம்மா காத்திருந்தாள். அவளைப் பார்த்ததும் கொஞ்சம் தெம்பாயிருந்தது. அவளிடம் புத்தகப் பையைக் கொடுத்து விட்டு பெரிய மனுஷி போல் யோசித்தவாறு நடந்தாள்.

பூட்டிய வீடு திறக்கப்பட்டது.

இயந்திரமாய் ராஜம்மா முன் நுழைய சுஜி பின் தொடர்ந்தாள். டைனிங் டேபிளில் முழங்காலில் முகம் புதைய தலை சாய்த்து உட்கார்ந்து கொண்டாள். 'அம்மா வந்ததும் நிச்சயம் அது பற்றியெல்லாம் பேசணும்' என நினைத்துக் கொண்டாள்.

ப்ரிஜ்ஜில் வைத்த ரொட்டியும் ஜாமும் ஒரு தட்டில் வைத்து எதிரே வைத்த ஆயாவை வெறுப்புடன் பார்த்தாள்.

"ஆயா... இது வேண்டாம்!"

"ஏண்டா?"

"பிடிக்கலே!"

"பசிக்குமே!"

"இல்ல... இன்னிக்குப் பசிக்கலே! நீ சாப்பிடு!"

"சரி சுஜிம்மா... பத்திரமா உள்ளேயே இரு. எங்கிட்டும் போயிடாதே. அம்மா வந்தாங்கன்னு என்னைத் திட்டும்" என்று சொல்லியவாறே பிரட்டையும், ஜாமையும் வாயில் திணித்துக் கொண்டு சாயங்கால ஆட்ட சினிமாவுக்கு ஓடினாள்.

கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தவள் மெதுவாக வெளியே வந்தாள். வாசற்படியில் உட்கார்ந்து கொண்டாள். லதா அம்மா அவளோடு கேரம் விளையாடிக் கொண்டிருப்பது ஜன்னல் வழியே தெரிந்தது. கண்ணீர் பனித்தது. 'அம்மா... அம்மா... மெல்ல கேவினாள். சிறிது நேரம் கழித்து உள்ளேச் சென்றாள். எத்தனை நேரம் கேவினாளோ... அவளுக்கேத் தெரியவில்லை. அம்மா வந்து எழுப்பியவுடன் தான் சுய நினைவுக்கே வந்தாள்.

"சுஜி... சுஜிம்மா!"

கண் விழித்த போது எதிரே அம்மாவும் அப்பாவும்.

"மம்மி... எனக்குப் பூரிக் கிழங்கு வேணும்மா... பண்ணித்தாம்மா!"

"ஐயோ... அதெல்லாம் நல்லாயிருக்காது. நான் வரும் போதே ஹோட்டல்ல இட்லி வாங்கி வந்துட்டேன். எழுந்திரு... சாப்பிடலாம்."

அவிழ்ச்ச மலராய் சூம்பி விட்டாள்.

'பிடிவாதம் செய்... அழு... பிடிவாதம் பிடித்தால் நிச்சயம் கிடைக்கும்...' உள் மனது அறிவுரை சொன்னது. 'பிடிவாதம் பிடித்தால் கிடைக்கும். உதை கிடைக்கும்' என்று சுஜிதாவுக்குத் தானே தெரியும். கடமைக்குச் சாப்பிட்டு விட்டு அறை மூலையில் போய் படுத்துக் கொண்டாள். அம்மாவும் அப்பாவும் சிரித்துக் கொண்டு சாப்பிடுவது காதில் விழுந்தது.

'காலையில் போறப்ப ரெண்டு பேரும் சண்டைப் போட்டுக்கறாங்க. சாயந்திரம் வரும் போது சந்தோஷமா திரும்பி வராங்க. ஆனா... ஆனா... என்னை மட்டும் கவனிக்கிறதே இல்ல... நான் கேட்டது எதுவும் செய்யறது இல்ல... இந்த அம்மா, அப்பா எனக்குப் பிடிக்கல்லே...'

ஏதோ புதிய குரல் கேட்டது... லதாவின் அம்மாவுடையது தான் அது.

"என்னங்க... அலுப்பா இல்லையா? வேலைக்கும் போயிட்டு... வீட்டு வேலையும் செய்துகிட்டு."

இதற்கு தன் அம்மா என்ன சொல்கிறாள் என காதைத் தீட்டிக் கொண்டு கேட்டாள் சுஜி.

"என்னங்க... எல்லாம் எம் பொண்ணுக்காகத் தானே... அவளோட எதிர்காலம் நல்லா இருக்கணும்னு தானே இப்படிக் கஷ்டப் படறோம்!"

"அதுவும் சரிதாங்க..."

இப்படி அவர்களது சம்பாஷணைத் தொடர்ந்தது. சுஜிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ஒன்று மட்டும் புரிந்தது... அம்மா பொய் சொல்கிறாள்!

---

உப்பு கலந்த நீரில் தரையை மெழுகினால் ஈ, கொசு மொய்க்காது.

வாழைப் பழங்களை காற்றுப் புகாத டப்பாவில் வைத்து குளிர்பதனப் பெட்டியினுள் வைத்து விட்டால் எத்தனை நாட்களானாலும் பழம் கெடாது. அப்படியே இருக்கும்.

— காயத்ரி

